7. விதி 110-ன்கீழ் கல்வி அமைச்சரின் அறிக்கை.

கிறித்துவ நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகளை 13ஆம் தேதி மூட வேண்டுமென சிலர் தெரிவித்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், பேரவை விதி 110-ன் கீழ் ஒரு முக்கிய அறிவிப்பைப் பேரவைக்கு அளிக்க அனுமதி கோரியுள்ளார். அதற்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற 13-ந் தேதியன்று, தமிழ்நாட்டில் உள்ள கிருஸ்தவ சமுதாயத்தினர் நடத்தும் பள்ளிகளை மூட வேண்டும் என்றும் அன்றைக்கு அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஊர்வலம் ஒன்று நடத்தவேண்டுமென்றும் மரியாதைக்குரிய மேதகு டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்களும் மற்றும் மோஸ்ட் ரெவெரெண்ட் டாக்டர் கசிமீர் ஞானாதிக்கம் அவர்களும் மற்றும் பல்வேறு பகுதிகளிலே இருக்கிற கிருஸ்துவ மதத் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்து இருப்பதாகத் தெரிகிறது. நம்முடைய சட்டமன்றத்திலே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் ஏற்கெனவே செய்திகள் தெரிந்ததற்குப் பிறகு நேற்று காலையில் மதுரையில் மரியாதைக்குரிய மேதகு டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்களை நேரிலே சந்தித்து அவருடைய குறைகள் என்ன என்பதையெல்லாம் கேட்டபோது அவர்கள் கிருஸ்தவ சமுதாயத்தினர் நடத்துகிற பள்ளிகளுக்கு அனுமதிகள் வழங்குவதிலே தாமதம் ஏற்படுகிறது; ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதிலே தாமதம் ஏற்படுகிறது; யாராவது ஓய்வு பெற்றுவிட்டால் அந்த இடத்தையும் நிரப்புவதற்கு முன் அனுமதி பெறவேண்டும் என்றெல்லாம் தெரிவிக்கிறார்கள் என்று இப்படிக் குறைகளைச் சொன்னார்கள். இதைப் போன்று ஒரு மாதத்திற்கு முன்பு சென்னையிலே உள்ள மோஸ்ட் ரெவெரெண்ட் டாக்டர் கசிமீர் ஞானாதிக்கம் அவர்களும் என்னை நேரிலேயே சந்தித்து இப்படிப்பட்ட சில குறைகளைச் சொன்னார்கள்.

பிற்பகல் 1-35

அவர்களிடத்தில் எந்தெந்தப் பள்ளிகளில் இப்போது ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன, அதற்கான புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தாருங்கள் ; வேறு என்ன குறைகள் என்பதையும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் விரைவில் அதைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்; ஆசிரியர்கள் பணியிடம் நிரப்புவது என்பது பொதுவாகவே

இன்றைக்குள்ள பொருளாதார நெருக்கடியில் ஆண்டுதோறும் 5,000, 6,000 ஆசிரியர்கள் தேவைப்படுகிற ஒரு சூழ்நிலையில் ஆயிரம் ஆசிரியர்களைத்தான் அரசு அனுமதித்துக்கொண்டிருக்கிறது; ஆகவே இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் மனதில் எண்ணி அரசு முடிவெடுத்து உங்களுக்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று ஒரு மாதத்திற்கு முன்பு மோஸ்ட் ரெவரன்ட் டாக்டர் கசிமீர் ஞானாதிக்கம் அவர்களிடத்தில் தெரிவித்தேன்.

நேற்று மதுரையில்—டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்கள் தான் இப்போது தமிழ்நாட்டில் இருக்கிற கிறித்துவ மதத்தின் ஒரு பிரிவைச் சார்ந்த, பெரிய பிரிவைச் சார்ந்த அந்த மதத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இந்தக் குறைகளை எல்லாம் சொன்னதற்குப் பிறகு இதை அரசின் கவனத்திற்கு இதுவரையில் நீங்கள் கொண்டுவரவில்லையே என்று நான் கேட்டேன். இல்லை, நாங்கள் அதிகாரிகளைச் சந்தித்தோம் என்று சொன்னார்கள். அதிகாரிகள் மட்டத்தில் சந்தித்தால் அவர்கள் பரிசீலித்துதான் சொல்வார்கள்; நீங்கள் கல்வி அமைச்சரைச் சந்தித்து இருக்கலாம்; அல்லது வேறு முயற்சியிலே ஈடுபட்டு எங்களைச் சந்தித்துச் சொல்லியிருந்தால் உடனடியாகத் தீர்க்கிற பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருப்போமே என்று சொன்னேன். அதற்கு, நான் முயற்சிக்கவில்லை என்று அவரே ஒப்புக்கொண்டார். இப்போது என்ன குறைகள் என்று கேட்டேன். நான் முன்னாலே சொன்ன குறைகளைத்தான் சொன்னார். நான் இருக்கிற சூழ்நிலைகளை எல்லாம் சொல்லி மிக விரைவில் இதற்குப் பரிகாரங்களை அரசு காணும் என்ற உறுதி அளித்தேன்.

இதற்கிடையில் முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க வேண்டும்; அது எங்களுடைய ஒரு குறை என்றார். நீங்கள் இதுவரையில் முயன்றீர்களா என்று கேட்டேன். இல்லை, சந்திக்க வேண்டும் என்றார். அப்படியானால் மாண்புமிகு முதல்வரோடு தொடர்புகொண்டு உங்களைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொன்னேன். அதற்குப் பிறகு இந்த 13ஆம் தேதி இப்படி ஒரு வேலை நிறுத்தம் போல் பள்ளிகளை எல்லாம் அன்றைக்கு அடைக்க வேண்டுமென்று தெரிவித்திருப்பதாகத் தெரிகிறதே என்றேன். நாங்கள் ஏற்கெனவே அறிவித்தாகிவிட்டது; அது நடைபெறும் என்று சொன்னார். இது தேவையில்லாத ஒன்று என்று சொன்னதற்குப் பிறகு—இன்னொன்று, நான் மதுரையில் சென்றபோது சுவரொட்டிகள் எல்லாம் ஒட்டி அரசாங்கத்தைக் கண்டித்து இருந்தார்கள். அதற்கு என்ன காரணம் என்றால் நான் நான்கு நாட்களுக்கு முன்பு பேரவையிலே அளித்த விளக்கத்திற்குரிய நிகழ்ச்சி: கன்னியாகுமரி மாவட்டத்திலேயும் வேறு சில பகுதிகளிலேயும் 15 ஆண்டுக் காலமாக அனுமதி பெறாமல் இந்த மைனாரிட்டி பள்ளிகளில் நியமனம் செய்யப்பெற்ற ஆசிரியர்களுடைய சம்பளப் பிரச்சினை. அப்படி 15 ஆண்டுக்காலம் இருக்கிற பிரச்சினைக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த

1992 பிப்ரவரி 10] [திரு. இராம வீரப்பன்]

சட்டமன்றத் தொடரிலேயே உடனடியாக அதற்குப் பரிகாரம் கண்டு 1—6—1991 முதல் அவர்களுக்குச் சம்பளம் வழங்கலாம் என்று அறிவிக்கச் சொன்னார்கள். கொள்கை முடிவை அறிவித்து விட்டோம். அதன் தொடர்பாக நிதித்துறையோடு கலந்து பேசி அவர்கள் சுமார் 2,000 ஆசிரியர்கள் இருப்பதாகத் கணக்குத் தருகிறார்கள். நம்முடைய கணக்குப்படி சுமார் 600-க்கு மேற் பட்ட ஆசிரியர்கள் வருகிறார்கள். அவர்கள் 300-க்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களிலே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு சுமார் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் கொடுக்கலாம் என்று இப்போது நிதித்துறை ஒப்புக்கொண்டு, அது நிதியமைச்சருடைய ஒப்புதலுக்கும் மாண்புமிகு முதல்வருடைய ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது. விரைவில் அரசாணை பெறப்பட்டு அது அறிவிக்கப்படும் என்றும் இந்தச் சட்டமன்றத்திலேயே அறிவித்திருக்கிறோம். அதையும் நேற்று மேதகு டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்களிடத்திலே நேரிலே தெரிவித்தேன்.

பிற்பகல் 1-40

அதைப்போல் கிறிஸ்தவக் கல்லூரியினுடைய அந்த விவகாரங் களை எல்லாம் அவரிடத்திலே எடுத்துச் சொன்னபோது அந்தக் கல்லூரிக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை என்று அவர்கள் தெளிவாகவே தெரிவித்தார்கள். ஆகவே இவ்வளவு சூழ்நிலை களுக்கு இடையில் கிறிஸ்தவ சமுதாயத்தைப் பற்றிய, ஒரு சிறு பான்மைச் சமுதாயம் பற்றிய பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அரசும் இவ்வளவு அக்கறை செலுத்து கிற ஒரு சூழ்நிலையில் 15 ஆண்டுக்காலம் தீர்க்கப்படாமல் இருந்த ஒரு பிரச்சினையை இவ்வளவு நிதி நெருக்கடிக்கு இடையில் சுமார் 2 1/2 கோடி ரூபாய்க்கு மேல் உடனடியாகக் கொடுங்கள் என்று உத்தரவிட்ட இந்த முதலமைச்சரை நீங்கள் நம்பாமல் வேறு யாரை நம்பப் போகிறீர்கள் என்று கூட நான் கேட்டேன். இல்லை, இல்லை, இனிமேல் நாங்கள் நேரிலே சந்தித்து, கோரிக் கைகளைத் தருகிறோம் என்றார்கள். அப்படியானால் இந்த 13ஆம் தேதி இந்த முயற்சி தேவையில்லையே என்று சொன்னேன். இல்லை, அறிவித்தாகிவிட்டது என்று சொன்னார்கள்.

இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிலே கிருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மிகுந்த வருத்தத்தோடு ஒன்றைத் தெரிவித்தார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் மூலமும், தமிழக அரசின் சார்பிலும், குறிப்பாக சிறுபான்மை இனத்தவருக்காக எந்தவிதமான முயற்சிகளுக்கும், எந்தவிதமான ஆதரவுகளுக்கும், எந்தவிதமான நன்மைகளுக் கும் காரணமாக உதவிக் கரத்தை நீட்டுகிற மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சார்பிலும் அருள்கூர்ந்து, இந்த 13-ம் தேதி பள்ளிகளை மூடுவது அல்லது ஊர்வலத்தை நடத்துவது என்ற தேவையில்லாத ஒரு பிரச்சினையை நடத்த வேண்டாம் என்று நான் வணக்கத்திற்குரிய, மேதகு டாக்டர் எம். ஆரோக்கிய

[திரு. இராம வீரப்பன்] [1992 பிப்ரவரி 10

சாமி அவர்களையும் மற்றும் அதே போன்ற பொறுப்பிலே இருக்கின்ற பேராயர்கள் அனைவரையும் அதற்குப் பிறகு நேற்று பிற்பகல் 2 மணிக்கு திண்டுக்கல்லிலே, 3 ஃபாதர்ஸ், அந்த 3 குருமார்களையும் சந்தித்து அவர்கள் குறையையும் கேட்டு பேசி விட்டுத்தான் 3 மணிக்கு மேல் நான் ஈரோட்டுக்கே புறப்பட்டேன். ஆகவே அரசை, அமைச்சர்களைச் சந்திக்காமல், தங்களுடைய கோரிக்கை, குறை என்ன என்பதைத் தெரிவிக்காமல், 15 ஆண்டு காலம் தீர்க்கப்படாமல் இருந்த ஒரு பிரச்சினையைத் தீர்த்து வைத்திருக்கிற, 2 1/2 கோடி ரூபாய்க்கு மேல் உடனே வழங்குங்கள் என்று ஆணையிட்டிருக்கிற முதலமைச்சருக்கு ஆதரவு தருகின்ற வகையில் அவருடைய கரத்தைப் பலப்படுத்துகின்ற வகையில் நம்முடைய மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரிய பேராயர் டாக்டர் எம். ஆரோக்கியசாமி அவர்களும், மற்றும் தி மோஸ்ட் ரெவரண்ட் டாக்டர் கசிமீர் ஞானாதிக்கம் அவர்களும் மற்றும் இதுபோன்ற கிருத்துவக் தலைவர்களும், இந்த 13 ஆம் தேதி பள்ளியை அடைப்பது, ஊர்வலத்தை நடத்துவது என்ற அந்த முயற்சியைக் கைவிடவேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Under Rule 110 Sub Rule (2) "There shall be no debate on such statement at the time it is made" ஆகவே டாக்டர் பியாட்ரிக்ஸ் டி. சோசா அவர்கள் இதன் மீது வேறு விளக்கம் எதுவும் தெரிவிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

8. அரசினர் தீர்மானம்.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையின் 25 (1)-வது விதியின்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப் பெறலாம்"

என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.